

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று(19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு இந்து குழும இயக்குநர் என். ராம் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூத்த சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு நடிகர் சத்யராஜ் அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# திரையுலகில் சிறந்து விளங்கியவர் மு.க.முத்து!

## மறைவுக்கு – ஐ.ஜெ.கே.தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்து இரங்கல்!

சென்னை, ஜுலை 20-

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகனும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சகோதரருமான மு.க.முத்து அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று மறைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

தமிழ்த் திரைப்பட நடிகரும் மேடைப் பாடகருமான மு.க.முத்து அவர்கள் திரைத்துறையில் சில காலங்கள் இருந்தாலும் மக்கள் மனதை வெகுவாகக் கவர்ந்தவர். திரைத்துறையில் 1970 ஆம் ஆண்டு நுழைந்து, பிள்ளையோ பிள்ளை, அணையா விளக்கு உள்ளிட்ட பல படங்களில் நடித்தும் தனது சொந்தக் குரலில் பல்வேறு பாடல்களை பாடியும் புகழ்பெற்றவர்.

மு.க.முத்து அவர்களின் மறைவால், அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் - திரைத்துறை நண்பர்களுக்கும் என் சார்பிலும், இந்திய ஜனநாயகக் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆன்மா இறைவனடி நிழலில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றேன் என்று இந்திய ஜனநாயகக் கட்சித் தலைவர் டாக்டர் ரவிபச்சமுத்து தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

## துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளின் பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!





சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம்,எழும்பூர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளின் பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20/07/2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி,ஸ்டாரன்ஸ் சாலை எம்.கே.டி மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட தொகுதிகளின் மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள்-முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.


பெரியாரைப் பற்றி

# மு.க.முத்து பாடிய பாடல் புகழ் பெற்ற ஒன்று!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல்!

சென்னை, ஜுலை 20-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்

மூத்த மகன் மு.க. முத்து அவர்கள் (வயது 77) இன்று (19.7.2025) காலை மறைவுற்றார் என்ற செய்தி பெரிதும் வருத்தத்திற்குரியதாகும்.

**‘தமிழரெல்லாம் மானத்துடன்**

**வாழ்வதற்கு யார் காரணம்?**

**பெரியார் காரணம்” என்று அவர் பாடிய பாடல் புகழ் பெற்ற ஒன்றாகும். கழகக் கூட்டங்களில் எல்லாம் ஒலி பரப்பப்படுவது வாடிக்கையாகும்.**

புகழ் பெற்ற பாடகர் சிதம்பரம் செயராமனின் இசை வாரிசு என்று சொல்லத்தக்க வகையில் பேசப்பட்டவர்.

நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சகோதரரும் ஆவார்.

திரைப்படத்துறையிலும் மு.க. முத்து அவர்கள் பயணித்தவர்; அவர்தம் பிரிவால் துயரத்திற்கு ஆளாகியிருக்கும் குடும்பத்தினருக்கும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# கலைஞரின் புதல்வர் மு.க.முத்து மறைவு!

## மருத்துவர் அன்புமணி இராமதாஸ் இரங்கல்!

சென்னை, ஜுலை. 20-

கலைஞரின் புதல்வர் மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு மருத்துவர் அன்புமணி இராமதாஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மூத்த புதல்வரும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மூத்த சகோதரரும் திரைப்பட நடிகருமான மு.க. முத்து அவர்கள் சென்னையில் இன்று காலமானார் என்ற செய்தியறிந்து வருத்தம் அடைந்தேன்.

அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள், திமுகவினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

## இளைஞர் அணி, விவசாய அணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!





காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி, விவசாய அணி, மாநகர நகர பகுதி ஒன்றிய பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 23.07.2025 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் மதுராந்தகம் சூனாம்பேடு சாலை ஏ.கே. திருமண மண்டபத்தில் எனது (க.சுந்தர்) தலைமையிலும் மாவட்ட அமைப்பாளர்கள் அ.யுவராஜ், ஜி.டி.எம். தெய்வசிகாமணி முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் இளைஞர் அணி, விவசாய அணி, மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.




கழகத் தலைவர் அவர்களின் ஆணையேற்று தியாகராயநகர் தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை தொகுதி பொறுப்பாளர் ரத்னா லோகேஷ்வரன் ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்ட கழக செயலாளர் செல்வகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.